3

# உங்களுக்கு ஏற்படும் தொல்லைகளை வெற்றிகொள்வது எப்படி? (1:5-11)

பிள்ளைகளை வளர்த்தல், நாளை தினத்தை எதிர்கொள்ளுதல், அகப்பட்டுக் கொண்ட உணர்வின் பிரச்சனையை எதிர்கொள்ளுதல் மற்றும் நேரம் கொண்டிருந்து அதை எவ்வாறு நிரப்புவது என்று அறியாதிருக்கும் பிரச்சனை போன்ற பரவலாக உள்ள தேவையானது இன்றைய உலகத்தின் அச்சுறுத்தும் அம்சங்களில் ஒன்றாக உள்ளது. இலக்குகளை நிறைவேற்றுதலின் கடுமையான உழைப்பை, வியாதியின் கொடூரமான அடிகளை அல்லது நாம் நேசிப்பவர்களை இழந்துபோகும் அதிர்ச்சிகளை எதிர்கொள்ளக் கூடியவர்களாக இனியும் மக்கள் தங்களைக் காண்பதில்லை. குற்றம் காண்பவரின், "மரணத்திற்குப் பின் வாழ்வு உண்டா?" என்ற கேள்வியானது "மரணத்திற்கு முன்பு *வாழ்வு* உண்டா?" என்ற கேள்வியைக் கொண்டு இடம்மாற்றப்பட்டுவிட்டது என்று கூறலாம்.

வாழ்வின் தீங்குகளைக் கையாளுதல் என்பதை அடிக்கடி நாம் கடினமானதாகக் காணுகிறோம். இந்த நிலையை நாம், ஆதாமின் பாவத்தினால் உலகத்திற்குள் கொண்டுவரப்பட்ட துன்பங்கள், வியாதிகள், சோதனைகள் மற்றும் மரணம் ஆகியவற்றின் மூலமாக, வேதாகம ரீதியாக விளக்கப்படுத்த முடியும். விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள் - ஆகிய எல்லா மக்களும் ஒரேவகையான சோதனைகள் மற்றும் உபத்திரவங்களை எதிர்கொள்கின்றனர். வாழ்வின் சோதனைகள் நமது விசுவாசத்தைப் பரீட்சை பார்க்கின்றன மற்றும் நாம் பக்குவமுள்ளவர்களாக நிறைவுள்ளவர்களாக ஆகும்படிக்கு இவைகள் நமக்குள் பொறுமையை மேம்படுத்துகின்றன என்று கூறியும் இந்த நிலையை நாம் விளக்க முடியும். ஆனால் அந்த அதிர்ச்சியான நிகழ்வுகளில் ஒன்றை நாம் எதிர்கொள்ளும்போது, வேதாகமரீதியான இந்த கருத்துநோக்கை நாம் இழந்துபோகத் தலைப்படுகிறோம்.

யாக்கோபு, மிகச்சிறப்பான தமது நடைமுறைப் பாணியில், தமது வாசகர்களுக்கும் நமக்கும் என்ன நடக்கும் என்று அறிந்திருப்பதாகக் காணப்படுகிறது. பரீட்சைகளின் நோக்கத்தையும் அந்தப் பரீட்சைகளின் முடிவு விளைவு என்னவாக இருக்க வேண்டும் என்பதையும் கூறியபின்பு, அவற்றை எவ்வாறு வெற்றிக்கொள்வது என்று அவர் கூறுகிறார். இதைச் செய்வதன்மூலம் யாக்கோபு, நமது கிறிஸ்தவ விசுவாசம் நமது அன்றாட வாழ்வில் எவ்வாறு பணியாற்ற வேண்டும் என்று செயல்விளக்கப்படுத்துகிறார்.

## ஞானம் வேண்டும் என்று கேளுங்கள் (1:5)

நாம் ஞானத்தில் குறையுள்ளவர்களாக இருப்பதால், நமக்கு ஏற்படும்

சோதனைகளைக் கையாளத் தவறுகிறோம். ஞானம் என்றால் என்ன? சந்தர்ப்பப்பொருளில் இவ்விடத்தில் ஞானம் என்பது, விஷயங்களைத் தேவனுடைய கருத்து நோக்கில் இருந்து காணும் திறமை என்பதாக உள்ளது. இது தேவன் தமது நித்திய கருத்து நோக்கில் இருந்து விஷயங்களை நமக்குக் காண்பித்தல் என்பதாக உள்ளது. இது நமக்கு, ஒவ்வொரு விஷயமும் எவ்வாறு பொருந்துகிறது என்பதைக் காண்பிக்கிறது: நாம் எவ்வாறு ஜெபிக்க வேண்டும், நாம் என்ன செய்ய வேண்டும், பிரச்சனையை நாம் வெற்றிகொள்வது எவ்வாறு, மற்றும் மிகமுக்கியமாக, அந்தப் பிரச்சனையானது நாம் வளருவதற்கு எவ்வாறு உதவ முடியும்.

நாம் பேசிக்கொண்டிருக்கும் ஞானம் என்பது, வேதாகமத்தைப் பற்றிய அறிவாக மாத்திரம் இருப்பதில்லை. வேதாகமத்தைப் பற்றிய அறிவானது ஒரு தனிநபரை அறிவுக்கூர்மையுள்ளவராக்கலாம், ஆனால் அது அவரை ஞானமுள்ளவராக்க வேண்டும் என்று அவசியமில்லை. ஆனால் ஒரு தனிநபர், வாழ்வைப் புரிந்துகொள்வதற்கும் வாழ்வின் பிரச்சனைகளின் வலையில் தமது நடக்கை மற்றும் பிறரின் நடக்கை ஆகியவற்றின் வழிகாட்டுவதற்கும், வேதாகமத்தை எவ்வாறு *பயன்படுத்துவது* என்று அறிந்திருப்பார் என்றால், *அப்போது* அறிவு என்பது ஞானம் என்பதாகக் கடந்து செல்கிறது எனலாம்.

இந்த வாழ்வின் நடைமுறைரீதியான அணுகுமுறை பற்றிய அவரது உறுதிப்பாட்டில், அழகிய நேரடித்தன்மையும் எளிமையும், யாக்கோபு நிருபத்தின் போதனையில் காணப்படுகின்றன. அவர், “நீங்கள் இந்த ஞானத்தில் குறைவுபடுகிறீர்களா? தேவனிடத்தில் கேளுங்கள், அவர் அதை மகிழ்ச்சியுடன் உங்களுக்குத் தருவார்.” அப்படிப்பட்ட எளிமையானது, ஒன்று முற்றிலும் மாயத்தோற்றமானதாக இருக்க வேண்டும் அல்லது தேவனைப் பற்றி அறியப்பட்டவற்றில் அது தனது நியாயப்படுத்துதலைக் கண்டறிவதாக இருக்க வேண்டும். யாக்கோபுவைப் பொறுத்த வரையில் இவ்விடத்தில் பிந்தியகருத்தே உண்மையானதாக உள்ளது. தேவனைப் பற்றி அவரது உபதேசமானது, இந்த ஆச்சரியமான வாக்குத்தத்தங்களை ஏற்படுத்தக் கூடியதாகவும் அந்த வாக்குத்தத்தங்களைத் தேவன் காத்துக்கொள்வார் என்று *அறிதலாகவும்* உள்ளது.

நாம் எல்லாரும், தேவனிடத்தில் ஞானத்தை நாம் கேட்கும்போது அதை அவர் நமக்குத் தருவதை விரும்புகிறார் என்பதை அறிய வேண்டும்! பழைய ஏற்பாட்டில் சாலொமோன் அனுபவித்த விஷயத்திற்கும், ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் தேவன் விரும்பும் விஷயத்திற்கும் இடையில் ஒரு நேரடித் தொடர்பு நிலவுகிறது. சாலொமோனுடைய வரலாற்றை நினைவுக்குக் கொண்டுவாருங்கள் (1 இராஜாக்கள் 3). அவர் இஸ்ரவேலின் அரசராகப் பணிசெய்யும்படி நியமிக்கப்பட்ட உடனே, அவருக்குக் கர்த்தர் ஒரு கனவில் தோன்றி, எதை வேண்டுமானாலும் கேட்கக் கூடிய வாய்ப்பை அவருக்குக் கொடுத்தார். சாலொமோன், “உமது ஜனங்களை நியாயம் விசாரிக்கவும், நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும், அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும்” என்று சாலொமோன் கேட்டது பற்றிக் கர்த்தர் மகிழ்ச்சி அடைந்தார் (1 இராஜாக்கள் 3:9). தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கு நாம் ஞானத்தைக் கேட்கும்போது தேவன் *எப்போதுமே* மகிழ்ச்சியடைகிறார் என்பது வேத வசனங்களிலிருந்து மிகவும் தெளிவாகி இருக்க வேண்டும். இவ்வகையான

*ஜெபத்திற்குப் பதில் அளிக்க அவர் விரும்புகிறார்.*

*நாம் இவ்வகையான ஞானத்தைக் கேட்க வேண்டும் என்று தேவன் நம்மிடத்தில் விரும்புவது ஏன்? ஏனென்றால், ஜெபத்தைப் பற்றிய நமது கிறிஸ்தவப் புரிந்துகொள்ளுதலில், ஜெபம் என்பது நமது ஒழுக்கரீதியான போது மற்ற தன்மைகளின் அறிக்கையையும், நாம் இன்னும் அதிகமாகக் கிறிஸ்துவைப் போலாக வேண்டும் என்ற நமது ஆர்வமான விருப்பத்தையும் உள்ளடக்குகிறது. கிறிஸ்தவர் (மதுபானம் அருந்துதல், போதைப் பொருட்களைப் பயன்படுத்துதல், ஒழுக்கவீனமான பாலுறவில் ஈடுபடுதல் முதலிய) தவறு செய்யும்படி தோழர்களின் அழுத்தத்தை எதிர்கொள்ளும்போது, அல்லது அவர் குடும்பப் பிரச்சனைகள் அல்லது அன்பிற்குரிய ஒருவரின் மரணம் என்பதை எதிர்கொள்ளும்போது, அவர் தமது சொந்த பலத்தைச் சார்ந்திருப்பதற்குப் பதிலாகத் தேவனிடத்தில் உதவி கேட்கிறார். அவரது ஜெபம் பின்வருமாறு இருக்கலாம்: "தேவனே, என்னால் இதைக் கையாள இயலாது! ஆனால் உமது உதவியுடன் நான் இதி லிருந்து முற்றிலும் கடந்து வருவேன் மற்றும் இதற்கு நான் ஒரு மிகச்சிறந்த நபராக இருப்பேன்." அந்த ஜெபமானது, நமது சொந்த பலத்தையல்ல ஆனால் தேவனுடைய பலத்தை நம்பியிருக்கும் கிறிஸ்தவ வாழ்வின் பண்பாக உள்ளது.*

## *உங்கள் விசுவாசம் செயல்படட்டும் (1:6-8)*

*நாம், 6முதல் 8வரை உள்ள வசனங்களை வாசிக்கும்போது, அடிக்கடி நாம், "ஆனால் யாக்கோபுவே, நான் சந்தேகத்துடன் மிகவும் அதிகமாகப் போராடுகிறேனே" என்று கூறுபவர்களாக நம்மைக் காணலாம். நாம், கிறிஸ்தவத்திற்கு மையமாக உள்ள அந்த சத்தியத்தைக் குறித்து சந்தேகப்படுகிறோம் என்று நாம் அர்த்தப்படுத்தவில்லை. உதாரணமாக, நாம் தேவன் இருக்கிறார், இயேசு மாம்சத்தில் வந்த தேவனாக இருக்கிறார், பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய செயல்படும் சக்தியாக இருக்கிறார், இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார், இயேசுவின் மீதுள்ள விசுவாசத்தினால் கிருபையினாலே இரட்சிப்பு உண்டு, இயேசு கட்டியெழுப்பிய சபையின் முதன்மை முக்கியத்துவம், மற்றும் தேவனுடைய சித்தத்திற்கு மனிதன் கீழ்ப்படிதல் உள்ளவனாக இருக்க வேண்டும் என்பதன் அவசியம் ஆகியவற்றைப் பற்றிச் சந்தேகப்படுவதில்லை. நாம் போராடுவது பின்வரும் விஷயமாக உள்ளது: "வாழ்வின் கடினமான வேளைகளில், நமக்கு உதவிசெய்யத் தேவன் தமது வல்ல மையைப் பயன்படுத்துவாரா?" உண்மையில், நாம் பலவேளைகளில் நம்மை, மாற்கு 9ல் "விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும்" (மாற்கு 9:24) என்று வியப்புற்ற சோகமிக்க தந்தையுடன் அதி கமாக அடையாளப்படுத்திக் கொள்கிறோம்.*

*யாக்கோபு, தேவனுக்குள் உள்ள ஏதொன்றும், அவர் நமது வேதனையின் வேளையில் ஞானத்தைக் கொடுப்பதில் இருந்து அவரைத் தடைசெய்வதில்லை, ஆனால் அந்தத் தடையானது நமக்குள்ளே இருக்கலாம். அதனால்தான் அவர், "ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்" என்று கூறுகிறார் (1:6). அவர் விசுவாசிகளுக்கு எழுதுகிறார் என்பதால், தேவன் மீது விசுவாசம் கொள்ளுமாறு மாத்திரம் அர்த்தப்படுத்துவ தில்லை, ஆனால் தேவன் தமது பிள்ளைகள் கேட்கின்றவற்றைச் செய்யக்கூடும் மற்றும் செய்வார் என்று விசுவாசிக்க வேண்டும் என்று அர்த்தப்படுத்துகிறார்.*

இந்தப் போராட்டங்களில், நாம் குறைந்தபட்சம் இரண்டு பிரச்சனைகளால் எதிர்கொள்ளப்படலாம். முதலாவது நாம், *என்ன* கேட்பது என்று அறியாதிருக்கலாம். கடினமான வேளையில் நாம், அந்தக் கடினத்தை நீக்கிப்போடும்படி தேவனிடத்தில் கேட்கச் சாய்வதில்லையா? ஆனால் யாக்கோபு கூறுவது அதுவல்ல. நாம் வாழ்வின் சிரமங்களிலிருந்து பக்குவமடையக் கூடும்படிக்கு, "ஞானத்தை" கேட்க வேண்டும் என்று அவர் தெளிவாகக் கூறுகிறார். இரண்டாவது நாம், தேவனுடைய உதவி இருப்பினும்கூட, நாம் எதிர்கொள்ளும் பிரச்சனைகளில் இருந்து நன்மையான எதுவும் வரக்கூடுமா என்று உறுதிப்பாடு இல்லாதவர்களாக இருக்கலாம். இவ்வகையான சூழ்நிலையை விவரிக்க யாக்கோபு வண்ணமிகும் சொல்விளக்கங்கள் இரண்டைப் பயன்படுத்துகிறார். 6ம் வசனத்தில் அவர், "... சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான்" என்று கூறுகிறார். கொந்தளிக்கும் கடலானது முற்றிலுமாகக் காற்றின் இரக்கத்தில் உள்ளது, அது அக்கடலைத் தான் வீசுகிற எல்லாத்திசைகளிலும் மாற்றிப்போடுகிறது. ஆனால் 8ம் வசனத்தில் இதைவிடச் சிறப்பான விவரிப்பு உள்ளது. அது, சந்தேகப்படுகிற மனிதன், "இருமனமுள்ளவனாக" இருக்கிறான் என்று கூறுகிறது. இவ்விடத்தில் பயன்படுத்தப்படுகிற கிரேக்க வார்த்தையானது, "இரு ஆத்துமா உள்ளவன்" என்று நேரடி அர்த்தப்படுகிறது. இது, ஒரு ஆத்துமா, "நான் விசுவாசிக்கிறேன்" என்று அறிவிக்க, இன்னொரு ஆத்துமா "நான் விசுவாசிக்கவில்லை" என்று பதிலுரைக்க உரத்துக் கூவுதல் போல் உள்ளது. அம்மனிதன் பிரிவுபட்ட கடப்பாடு கொண்டிருக்கிறான், சிலவேளைகளில் அவன், தனக்குத் தேவன் உதவலாம் என்று நினைக்கிறான், மற்றும் பிற வேளைகளில் அவன் அந்த நம்பிக்கையைக் கைவிட்டவனாக தீர்வு எதையும் கண்டறியாதிருக்கிறான். இவ்வகையான தனிநபர், ஜான் பனியன் என்பவரின் இலக்கியப் படைப்பான *மோட்சப் பிரயாணம்* என்ற கதையில் வரும், "இருபுறமும் கண்ணோக்கும் கணவன்" என்பவருக்கு இணையாக இருக்கிறான்.

நாம் தேவன்மீது நம்பிக்கை வைத்தால், அவரது வழி என்ன என்று நாம் அறிவதற்கு முன்னரே கூட, அவரது வழி மிகச்சிறந்தது என்று புரிந்துகொள்கிறோம். நமக்கு ஞானம் வேண்டும் என்று நாம், இவ்வகையான விசுவாசத்துடன் அவரிடத்தில் கேட்டால், நாம் அதைப் பெற்றுக்கொள்வோம். தேவனுடைய ஞானத்தால் நாம் நிச்சயத்தன்மையுடன் முன்செல்ல முடியும்.

## தவறான விஷயங்களைச் சார்ந்திருக்க வேண்டாம் (1:9-11)

9 முதல் 11 வரையிலான வசனங்கள், ஒரு புதிய பாடக்கருத்தை அறிமுகப்படுத்துவதாகப் பல கல்வியாளர்களால் நினைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் சந்தர்ப்பப் பொருளில் உள்ள கருத்தானது, வாழ்வின் சோதனைகளில் பொறுமையுடன் இருத்தல் என்பதைப் பற்றியதாக இருப்பதால், இந்த வசனங்கள் அதே பொதுப்பாடக் கருத்துடன் தொடர்புடையவையாக உள்ளன என்று புரிந்து கொள்ளுதலே மிகச்சிறப்பானதாக உள்ளது.[1]

அடிக்கடி நாம் நமது நம்பிக்கையை உலகப்பிரகாரமான பொருட்களில் வைக்கிறோம் என்பதால் வாழ்வின் இடர்ப்பாடுகளினால் நாம்

*மூழ்கடிக்கப்படுகிறோம். "ஐசுவரியவானான" சகோதரர் தமது செல்வத்தைத் தமது பாதுகாப்பாகக் கண்ணோக்குகிறார், "ஏழை" சகோதரர், செல்வத்தில் தாம் கொண்டுள்ள குறைவு, வாழ்வின் சிரமங்களைத் தம்மால் கையாள முடியாதிருப்பதற்கான காரணமாகக் கூறுகிறார். "சோதனைகள்" மே ம்போக்கான எந்த வித்தியாசங்களையும் அழித்துப் போடுகின்றன மற்றும் அவை செல்வத்தின் மீதும் புதிய கருத்து நோக்கைக் கொடுக்கின்றன என்று யாக்கோபு சுட்டிக் காண்பிப்பதாகக் காணப்படுகிறார்.*

*தாழ்ந்த சகோதரன், தான் "உயர்த்தப்பட்டதை" குறித்து மேன்மை பாராட்டுதல் என்பது, முதலாவது கிறிஸ்துவுக்குள் அவரது நிலைப்பாட்டிற்கான குறிப்பைக் கொண்டுள்ளது. அவரை இரட்சித்ததில் தேவன் அவரைத் தூக்கியெடுத்து அவருக்குப் புதிய கண்ணியத்தையும் தகுதியையும் கொடுக்கிறார். அவர் தம்மைத் தேவனுக்கும், சபைக்கும் மற்றும் உலகத்திற்கும் மதிப்புடையவராகக் காணுகிறார். இருப்பினும் இந்த சந்தர்ப்பப்பொருளில், "கிறிஸ்துவுக்காக உபத்திரவப்படுதலின் சிலாக்கியத்தையே" யாக்கோபு தமது சிந்தையில் கொண்டிருப்பதாகக் காணப்படுகிறது. வேதவசனங்கள், இவ்வகையான போதனைகளால் நிரம்பியுள்ளது (நடபடிகள் 5:41; 2 தீமோத்தேயு 3:12; 1 பேதுரு 4:16). இயேசுவினிமித்தமாக பாடுகளை அனுபவித்தல் என்பது கிறிஸ்தவரின் ஏழ்மைக்கான ஈடுகளைக் காட்டிலும் அதிகமாகக் கனத்திற்குரிய நிலைப்பாட்டிற்கு உயர்த்துகிறது.*

*ஏழை மனிதரை உயர்த்தி அவருக்குத் தகுதியின் ஒரு புதிய கருத்தைக் கொடுக்கிற அதே நடத்துதலானது, செல்வந்தரான மனிதரைத் தாழ்மைப்படுத்தவும் செய்கிறது. பாடுகளை அனுபவித்தல் என்பது அவருக்கு, தமது செல்வம் மற்றும் உடமை ஆகியவற்றின் காரணமாக வாழ்வின் மீது நிரந்தரமான ஒப்பந்தத்தைக் கொண்டிருத்தலுக்குப் பதிலாக, அவரது வாழ்வு ஒரு காட்டுப் பூவைக் காட்டிலும் அதிகம் நிரந்தரமாக இருப்பதில்லை என்பதை உணர்த்துகிறது. ஆகவே, யாக்கோபு பின்வருமாறு கூறுகிறார்,*

> *ஐசுவரியவான் தான் தாழ்த்தப்பட்டதைக்குறித்து மேன்மை பாராட்டக்கடவன்; ஏனெனில் அவன் புல்லின் பூவைப்போல் ஒழிந்துபோவான். சூரியன் கடும் வெய்யிலுடன் உதித்து, புல்லை உலர்த்தும்போது, அதின் பூ உதிர்ந்து, அதின் அழகான வடிவு அழிந்துபோம்; ஐசுவரியவானும் அப்படியே தன் வழிகளில் வாடிப்போவான் (1:10, 11).*

## *முடிவுரை*

*நாம் நமது சோதனைகளை எவ்வாறு கையாளுகிறோம்? நமது சொந்த பலத்துடனா? நமது சொந்த உலகப்பிரகாரமான செல்வத்தின் மூலமாகவா? நாம் அவ்வாறு செய்தால், வாழ்வானது ஒன்றுக்குப் பின் இன்னொன்றாக நசுக்குதலாக இருக்கும்! நம்மை நாம் தாழ்த்தி தேவனிடத்தில் உதவி கேட்கவும் அவர் நமக்கு உதவுவார் என்று நம்பவும் கற்றுக்கொள்ளாத வரையில், நமது சோதனைகள் நம்மை மூழ்கடிக்கச் செய்வதாக இருக்கும்.*

குறிப்பு

[1]Donald W. Burdick, "James," in *The Expositor's Bible Commentary: Hebrews-Revelation* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, n.d.).